## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S.No.19/2023

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 12.03.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுவாமிநாதன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | தங்கவேல் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என் தகப்பானருக்கு நானும், மாரிமுத்து, நாகராஜன், தர்மாம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம். என் தகப்பனாருக்கு தாவா சொத்துக்கள் மட்டும் தான் சொந்தமானதாகும். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும். என் சகோதரர் நாகராஜன் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும்திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.13/2011 வழக்கில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் என்னை 2 ம் பிரதிவாதியாக சேர்த்து தான் நாகராஜன் வழக்கு நடத்தினார் என்றால் இல்லை.

நான் கடந்த 27.02.2022 ல் சுபா என்பவருக்கு தாவா சொத்தை பொறுத்து கிரையம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அது வேறு சர்வே எண் ஆகும். தாவா சொத்தின் சர்வே எண். சரியாக ஞாபகமில்லை. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் செல்லத்தக்கதல்ல என கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.03.14 10:13:43 +0530

District Munsif

Mannargudi.